**சுருக்கம்**

திட்டங்கள் – மாநில திட்டம் – நமக்கு நாமே திட்டம் (NNT) - 2022-2023-ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்காக நிர்வாக அனுமதி மற்றும் நிதிவிடுவிப்பு வழிகாட்டு நெறிமுறைகளுடன் வெளியிடப்பட்டது – அதனைத் தொடர்ந்து ரூ.34.09 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு மற்றும் விடுவிப்பு செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மா.அ.தி.1) துறை

அரசாணை (நிலை) எண்.43

நாள் 27.03.2023
சுபகிருது, பங்குனி 13–ந் தேதி
திருவள்ளுவர் ஆண்டு - 2054
படிக்கப்பட்டவை :

(1) அரசாணை (நிலை) எண்.130, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மாஅதி-1) துறை, நாள் 02.12.2022.
(2) அரசாணை (நிலை) எண்.12, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மாஅதி-1) துறை, நாள் 16.02.2023.

மேலும் படிக்கப்பட்டவை :

(3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.35638/2022/சிடிஎஸ்-4, நாள். 02.03.2023.

ஆணை :

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், நமக்கு நாமே திட்டத்தை (NNT) 2022-23-ஆம் ஆண்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி, நமக்கு நாமே திட்ட வங்கிக் கணக்கில் இருப்பில் உள்ள தொகை ரூ.41.66 கோடியினை பயன்படுத்திட விரிவான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டது. மேலும், நமக்கு நாமே திட்ட வங்கி கணக்கிலுள்ள ரூ.41.66 கோடி இருப்புத் தொகையை பயன்படுத்திய பிறகு, மீதமுள்ள நிலுவைத் தொகை ரூ.58.34 கோடியை விடுவித்திட (ரூ.8.34 கோடி மற்றும் ரூ.50.00 கோடி) கருத்துருவை அரசுக்கு அனுப்பி வைத்திட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தியும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், நமக்கு நாமே திட்டக் கணக்கின் இருப்பிலுள்ள தொகை ரூ.41.66 கோடியை கணக்கில் கொண்டு ரூ.58.34 கோடியினை இரண்டாவது மற்றும் இறுதி தவணையாக விடுவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், 2022-23-ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்திற்கு பயன்படுத்திட அரசால் தெரிவிக்கப்பட்ட ரூ.41.66 கோடி, 2020-21-ஆம் ஆண்டில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மாவட்டங்களில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதால் (Committed Liability), மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்ட ரூ.41.66 கோடியை 2022-23-ஆம் நிதியாண்டுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளுக்கு மீள பயன்படுத்திக்கொள்ள இயலாத நிலை உள்ளது என தெரிவித்து 2021-22-ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகள் மற்றும் செலவிடப்பட்ட நிதி விவரங்களை உள்ளடக்கிய கருத்துருவை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு அனுப்பியிருந்தார்.

4. மேலும், நாளதுவரை நமக்கு நாமே திட்டம் 2021-22ன் கீழ் நடைபெற்று வரும் பணிகளுக்கு (Committed liability) ஒதுக்கீடு செய்து, ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள தொகை ரூ.59.82 கோடி என தெரிவித்து, 2022-23-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் விவரத்தை அரசுக்கு அனுப்பியும், மேலும் 2022-23-ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் பத்தி எண்.9(V)-ன் படி, ஊரக வளர்ச்சி ஆணையருக்கென ஒதுக்கப்பட்ட 25 விழுக்காடு சிறப்பு ஒதுக்கீட்டிற்கான கருத்துருக்கள் 7 மாவட்டங்களிலிருந்து 293 பணிகளுக்கு ரூ.30.85 கோடி அரசு பங்குத் தொகை விடுவித்திட கோரி கருத்துரு வரப்பெற்றுள்ளது எனவும், மேற்காணும் 293 பணிகளுக்கு பொதுமக்கள் பங்களிப்பு தொகை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து 2022-23-ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளுக்காக மொத்தம் தேவைப்படும் தொகை ரூ.91.43 கோடி என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மேலும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் விடுவிக்கப்பட்ட தொகை ரூ.58.34 கோடி போக மேலும் விடுவிக்கப்பட வேண்டிய தொகை ரூ.41.66-கோடியில், 2022-23-ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மாவட்டங்களில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளுக்கும், பொது மக்கள் பங்குத் தொகை பெற்று சிறப்பு ஒதுக்கீடு கோரும் பணிகளுக்கு தேவைப்படும் நிதி ரூ.34.09 கோடியை (1% IEC நிதி ஒதுக்கீடு ரூ.1 கோடி உட்பட) இந்நிதியாண்டிலேயே விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசிடம் கோரியுள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து அதனை ஏற்று கொள்வதென முடிவு செய்து அதன்படி, 2022-2023-ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியில் விடுவிக்கப்பட்ட தொகை ரூ.58.34 கோடியை தொடர்ந்து மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு ரூ.34,09,00,000/- (முப்பத்து நான்கு கோடியே ஒன்பது இலட்சம் ரூபாய் மட்டும்)-க்கு நிதி ஒப்பளிப்பு மற்றும் விடுவிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்:-

"2515 – 00 – ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 102 – சமுதாய மேம்பாடு – மாநிலச் செலவினங்கள் – AU. "நமக்கு நாமே" திட்டத்தை செயல்படுத்தல் – 309 – உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை."
[த.தொ.கு. 2515 00 102 AU30903]

8. மேலே உள்ள பத்தி 6-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்க (சென்னை நீங்கலாக) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது. மேலும், நமக்கு நாமே திட்டத்தினை 2022-2023-ஆம் ஆண்டில் செயல்படுத்துவது தொடர்பான முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்ப தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

9. இவ்வரசாணை, நிதித் துறையின் அ.சா. எண்.36/நிதித் துறை(ஊ.வ)/2023, நாள் 27.03.2023-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக),
(வழி: ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15).
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்,
(வழி :ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15 வாயிலாக).

ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை-35.
மாநில தலைமை கணக்காயர், சென்னை-9/18/35.
சம்பள கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்) சென்னை-9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு/வடக்கு/தெற்கு), சென்னை-8/1/35.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தேசிய தகவல் மையம், சென்னை-9.

**<u>நகல்</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர்(ஊரக வளர்ச்சி) அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளரின்
முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
நிதி(வரவு-செலவு-I/வரவு–செலவு-II/ஊ.வ) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

27-3-2023
பிரிவு அலுவலர்
27/3